உ

கடவுள் துணை.

சுப்பிரமணியக்கடவுள்பேரில்

# சிவசெந்திமாலை

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

30

# விளம்பரம்.

**இதனால்** சகலருக்கும் **அறிவிப்பது**, சென்னை, சூளை, **போஸ்டைச்**சேர்ந்த காளத்தியப்பமுதலி வீதி, 1[illegible]-18வது நெ. **வீட்டில் ஸ்தாபித்திருக்கும் கோண்டன்** அச்சுயந்திரசாலையில் **இங்கிலீஷ்**, தமிழ், தெலுங்கு, ஸ்கூலபுத்தகங்களும், அநேகவித **மருந்துகளும்**, விசித்ரமான **ரப்பர் ஸ்டாம்புகளும்** ரப்பர் **எழுத்துகளும்**, ஸ்டீரியோ பிலேட்டுகளும், ஜர்மன் சில்வர் நகைகளும், அத்தர் தினுசுகளும், டொப்பி தினுசுகளும், போஸ்டுகார்டு அளவுள்ள விநோதமாகிய பொட்டகிராப் படங்களும் தேவையானவர்கள் அரையணா லேபிலில் அனுப்பி தங்கள் விலாசம் தெரிவித்தால் 2-அணா பெறும்படியான (2) கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

தேவையானவர்கள் **அடியிற்கண்டிருக்கும் கம்பெனியாரவர்களுக்கு** எழுதிபெற்றுக் **கொள்ளலாம்.**

**டி, கோபால் அண்டு கோ.**

**கோள்டன் பிரஸ், சூளை போஸ்டு, மதராஸ்.**

உ

கடவுள் துணை.

சுப்ரமணியர் பேரில்

# சிவசெந்திமாலை.

———(*)———

வெண்பா.

காட்டுவழிபோனாலும் கள்ளர்பயமானாலும்
கேட்டுவழிகாலனார் கிட்டுகிலும்-நாட்டமுடன்
நம்பிக்கையாக நமக்குவினாயகனார்
தும்பிக்கையுண்டு துணை.

செந்திவளர்நாயகனே சிவனேயுந்தன்
சீர்பாதம்போற்றிசெய்து சிறப்பாய்ப்பாட
வந்துதமிழ்வாக்கருளும் வாலைத்தாயே
மலரடியைநானடியேன் வருந்திநித்தம்
தந்திரமாய்சடாட்சரத்தை தியானஞ்செய்ய
சரஸ்வதியும்சாமுண்டி வீரவாகு
செந்தில்வாழ்விநாயகனே முருகாஐயா
சீர்பாதமென்னாளுஞ் சரணங்காப்பே. (1)

ஈசன்மகிழ்போதிகைமுனி குருவுமாகி
யீராறுகைதனிலே வேலுமேந்தி
பாசமுடன்மயிலேறி அசுரரைவென்று
பண்பானஅமரருட துயரந்தீர்த்து
தேசிகனார்செந்தில்வடி வேலர்மீதில்
தீர்க்கமாயன்பத்தோர் கவிநான்சொல்ல
மாசிலாப்பரஞ்சோதி ஒற்றைக்கொம்பன்
மலரடியையனுதினமும் வணங்குவோமே. (2)

காருகந்தமேனியனு மயனுங்காணார்
கடவுளர்க்கு உபதேச மருளுமூர்த்தி
வாருகந்தகுவிமுலையா ளுமையாளீன்ற
வளர்மணியேசெழுஞ்சுடரே மயிற்கடம்பா
தாருகந்தபனிரண்டு சையும்வேலுஞ்
சண்முகனேஉன்னிருதாள் சதங்கைகொஞ்ச
சீருகந்துயெனையாளு மையாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (3)

அயிலிலங்கச்செழுஞ்சேவல் கொடியும்வாளு
மாழிசங்கசூலமழு வழகாயேந்தி
துயிலிலங்குமணிமார்பும் கடம்பதாலுஞ்
சோதியொத்ததிருமேனி சுயம்பிரகாசம்

ஒயிலிலங்குநடையழகும் வுனைக்கொண்டாட
உன்னிருதாள்சதங்கைகொஞ்ச வுகந்தேவந்து
செயிலிலங்கயெனைக்கார்க்க அய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி (4)

முற்றுநவரத்தினமுடி யசையுமுல்லை
முறுவலொருகனிவாயு முகங்களாறுஞ்
சற்றுகுரமாதுவள்ளி தெய்வானைசூழ
மயில்சேவல்கொடியிலங்க வன்புகூர்ந்து
எற்றேசகாலமுந்தன் பாதம்போற்றி
எளியேநான்தெண்டனிட யெனைநீகார்க்க
றசிறடியில்சிலம்புகொஞ்ச அய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (5)

கஞ்சமலரணியுந்திரு வுந்திமார்பும்
காதிலிசைகுண்டலமுங் கையில்வேலுந்
தஞ்சமென்றோற்கருள்புரி மமூர்தவாயுஞ்
சண்முகனேவுன்னிருதாள் சதங்கைகொஞ்ச
அஞ்சலென்றுவந்தடியேன் றென்னைக்காக்க
அழகானமயிலேறி வடியேன்முன்பு
செஞ்சதங்கைகலசலென அய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (6)

பழம்பொருளே மனோன்மணியாளீன்றெடுத்த
பாக்கியமேமெஞ்ஞானப் பவுகேவேதத்
தொழுவும்பொருளே யிடையின்கலைசுழியின்மீதில்
துலங்குநலம்புரிந்தருளுஞ் சுவாமிநாதா
இளம்பொருளேவள்ளியம்மன் தெய்வயானை
யின்பசுநாயகனே யெளியேனுள்ளஞ்
செழும்பொருளேயென்குருவே சித்தேவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (7)

விரிவுற்றதோகைமயில் மீதிலேறி
வீரவாகுதம்பிமார் மிக்கவீரர்
அரிவுற்றபூதபடை சூழ்ந்துசேவ
அயல்சேவல்கொடியிலங்க அன்னைக்காவும்
வரிவுற்றவள்ளிஅம்மாள் தாய்தெய்வானை
வலமிடமாயெழுந்தருளி மனதுகூர்ந்து
தெரிசிற்றுநான்போற்ற வய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (8)

மெய்யுற்றபரஞ்சுடரே கருணைமூர்த்தி
வேதாந்தமெய்ப்பொருளே அமலநாதா
மையுற்றகூர்விழியாள் வள்ளியம்மாள்
வசிகரசிகாமணியே வாவாயென்முன்

கையுற்றவேர் துலங்க இடைதள்ளாட
கனகபதசிலம்புதண்டை கலீரென்றேமுன்
மெய்யுற்றநான்போற்ற வய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (9)

கடம்பணிந்தபுயமிலங்க யிடைதள்ளாடி
கரங்கள்பனிரெண்டிலங்க வயிரமுத்து
வடம்புனைந்தமார்புதனில் குழையிலங்க
மதிமுகமுஞ்சடைமுடியும் பளபளென்ன
நடம்புரிந்தபதந்துலங்க சதங்கைகொஞ்ச
நறுமலர்கள்கமகமென நாயேனுள்ளந்
திடம்புரிந்துயெனையாளு மையாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (10)

சருவலோகநாயகனே விஞ்ஞைமூலத்
தவக்கொழுந்தேமெய்ஞ்ஞான தாயாம்வள்ளி
சிறுமருவுபாகரனே பரங்கிரியில்சுவாமி
யந்தவளும்பாலசுப்பிர மண்யதேவா
அருணகிரிநீலகண்டர் மனோன்மணியாள்
அருள்நிறைந்தகண்மணியே அழகேஞான
திரவியமேயென்குருவே சித்தேவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (11)

மந்திரஞ்சேர்மெய்ப்பொருளே ஞானமூர்த்தி
வாலையம்மாளீன்றெடுத்த மாகதமேமூலந்
தந்திமுகன்றனைப்படைத்த சுவாமிநாதா
சகலசித்துமாடுகின்ற சற்குருவேஞான
சுந்தரமேவள்ளி தெய்வயானைநேயா
துரந்தரமேசௌந்தரமே துலங்கவெந்தன்
சிந்தைகுடிகொண்டருளு மையாவாவா
சிவசிவாசெந்திவ்வளர் சிவனேபோற்றி. (12)

அளியாதயேகவெளி வீதியாகி
யகண்டபரிபூரணமாய் வாசியோகஞ்
சுளியாகிசுழிமுனையில் சூட்சமாகித்
துலங்குகின்றவித்துவச நாதமாகி
ஒளியாகிப்பரஞ்சுடரா யுருவமாகி
ஒன்றிரண்டாய்மூன்றாக உலகமெங்குந்
தெளிவாகவிளையாடுமையாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (13)

கைகொடுத்துமெள்ளமெள்ளவாவாவென்றால்
கால்தூக்கிநடக்கநடைக்காட்டியென்னை
பையேனும்நடைவருமோ தூக்கினாலும்
படுத்திருந்து தூங்குமுன்னே பரனேயுந்தன்

மெய்வருளேதான்காட்டி ஞானங்காட்டி
விந்தைமலர்தான்காட்டி வியாளக்கொண்டு
செய்தவாக்கு இதுசமய மையாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (14)

நலங்கள்பெற ஆறெழுத்தின் பொருளுங்காட்டி
நடுவில்நின்றமுதலெழுத்தின் சூட்சங்காட்டி
இலங்குகின்றவிதிவாசல் நாலுங்காட்டி
சூழ்ந்துநின்றநவவீர சொரூபங்காட்டி
துலங்குகின்றதெய்வானை மயில்சேவல்யேந்தி
யென்னிருகண்விழிகாணத் தோன்றிகாட்டி
சிலங்கைபதந்தனைக்காட்டு மையாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (14)

அன்பருளமேவுகின்ற நாயகனேவாவா
அரகரா ஆறுமுக சுவாமிவாவா
உம்பர்குடிவாழவந்த நாயகனேவாவா
ஓம்நமசிவாயகுரு தேசிகனேவாவா
யென்பெருமாளென்சுவாமி நாதாவாவா
யென்கோவேயெனையாளும் நாயகனேவாவா
தென்பொதிகைமுனிபணியு மைய்யாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (16)

காரிலங்குகூந்தல்மின்னாள் மோகங்காட்டி
காமயிதழ்சுகங்காட்டிக் கருணைகூர்ந்து
நேரிலங்குந்தமிழ்காட்டி ஞானங்காட்டி
நினைவிலுமரியாத அருளுங்காட்டி
தாரிலங்குந்திருமார்புந் தோளுங்காட்டி
சண்முகமும்பன்னிருகை வேலுங்காட்டி
சீரிலங்கும்பதங்காட்டு மையாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (17)

ஆசையெனும்பேரின்ப பொருளுங்காட்டி
அஞ்செழுத்திளுறெழுத்தி னருளுங்காட்டி
பூசைசெய்யும்விதிப்படியே முறையுங்காட்டி
பூரணமாய்மெஞ்ஞானப் பொருளுங்காட்டி
மாசிலாப்பரஞ்சோதி மணிபோலெந்தன்
மனதிலொன் றும்பிரியாத மௌனங்காட்டி
தேசிகனேயெனையாளு மையாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (18)

உருப்படித்தியானாக்கி யெழுந்தபிள்ளை
ஓதுதற்குயிசைகாட்டி உள்ளொளிக்குள்
பொருத்தியைந்துபுலன் களையு மொன்றாய்க்காட்டி
பூரணமாய்மெஞ்ஞானப் பொருளுங்காட்டி

கருத்திலொன்றும்பிரியாம லருளுங்காட்டி
கல்வியின்பசுகங்காட்டி கருணைசூர்ந்து
திருத்தியெனையாட்கொண்ட வையாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (19)

நானுந்தன்பதமுழுதும் நம்பினேன்வா
நற்கதிதந்தாண்டருள்வாய் நாடிநீயுந்
தானுந்தன்கிருபைசெய்து அருள்புரிவாய்
தமிழிசையும்விசையுமுற்றும் தந்துகார்ப்பாய்
மானீன்றபூங்கொடியாள் கானில்வள்ளி
மாத்தெள்ளிகொடுக்குந் தினைமாவின்மிக்க
தேனுண்டகனிவாயா அய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (20)

வாடுகின்றமெய்ப்பொருளே அய்யாவாவா
பாக்கியமேமெஞ்ஞான பவுசேவாவா
நாடுகின்றயென்குருவே சாமிவாவா
நாதாத்தவஷனியாள் பாலாவாவா
ஆடுகின்றநாதாந்தப் பொருளேவாவா
ஆச்சரியமருள்புரியு மடியேனுள்ள
தேடுகின்றமெய்ப்பொருளே அய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (21)

உன்பதத்தைக்காணுத விழிதானென்ன
உன்செடலைப்பாடாத வாய்தானென்ன
அன்புடனேயுனைத்துதியாச் சிந்தையென்ன
அனுதினமுஞ்சேர்வைசெய்யாக் கைதானென்ன
நம்பனைத்தியானஞ்செய்யா மனந்தானென்ன
நாயுடலைவளர்த்துமென்ன யிருந்துமென்ன
தென்பொதிகைமுனியணியுமையாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (22)

சுப்பய்யாஎன்சுவாமி வாவாயென்று
துதிக்கமிகவடிபணிந்து அழைத்தவேளை
அபயமய்யாயெந்தன்முன்னே வருவதற்கு
ஆயாசமேதுசொல்லும் மடியேனுன்னை
எப்பய்யாமறைந்திருந்தேன் குறைகளேது
இதுவேதுஅறிந்ததில்லை யெனக்கேஅன்பாய்
செப்பய்யாவாய்திறந்து வய்யாபாலா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (23)

விரிகமலோன்பரவுகின்ற விமலாவாவா
வேதாந்தமெஞ்ஞான விசாகாவாவா
பரிபுரவொளியேவம் பரனேவாவா
பரமகுருசாமிகந்த சுவாமிவாவா

அரிநமசிவாயமெனும் பொருளேவாவா
ஆறெழுத்தி அகந்தருளு மறுமுகனேவாவா
திரிபுரதாண்டவராய அய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி, (24)

அப்பனேவாசற்குருவா அண்ணலேவாவா
அங்குமிங்குமாய்நிறைந்த வழகேவாவா
சுப்பய்யாவாமுத்தய்யாவா துரந்தராவா
சுந்தரியாளீன்றெடுத்த துரையோவாவா
யிப்பவாயிங்குவா யென்முன்னேவா
யெளியேனைக்காத்தருளுஞ் சுவாமிவாவா
யெப்பெரியமுன்பொருளே யென்னையாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (52)

அலங்காவிமதில்சூழ் மலையுஞ்சார்பும்
வழூர்தநதிசுத்திவரு மல்லிதேசம்
யிலங்குகின்றமாத்தூரில் யடுவேகம்பம்
யெட்குரண்டுஞ்சகர்த்து வைத்தவட்டவீடு
துலங்குகின்றமேல்வாசல் துணிந்தவீடு
தூக்கியிருகால்பாதந் தொந்தோமென்று
சதங்கைபதந்தனைக்காட்டி அய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (26)

அன்னையுநீ தந்தையுநீ யென்னையாளுஞ்
சற்குருநீயென்றழைத்தால் தமியன்முன்னே
வந்ததினாலுன்குலத்தில் தாட்சியாமோ
வராமலிருப்பதற்கு வழக்கேதுண்டோ
யெந்தனுக்குசேனையுண்டோ வுனைப்பிடித்து
யெளியேன்முன்கொண்டுவர தொந்தையோசொல்
செந்திநகர்தனில்வாழு மையாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (27)

எடுத்தமுறைதவறும லிருக்கவேணும்
யெங்கிலுமுன் செந்தமிழைப்பாடவேணும்
தடுத்தோரைவாயடக்கச் செய்யவேணுஞ்
சடாட்சரத்திலவுன் பெருமைநாட்டவேணும்
அடுத்தோர்க்குவுன்செயலைக் காட்டவேணும்
அனுதினமும்பாதமலர் சூட்டவேணும்
திடத்துடனெனையாளு மையாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (28)

முப்பொருளேதற்பரமே யகண்டவீதி
முடியிலங்குகோமளமே முதலென்கோவே
அப்பனேவாவென்றுகெஞ்சி யழைப்பதல்லால்
அதட்டிவரழைப்பதுண்டோ ஆர்தான்சொல்லும்

இப்படியாய்த்திருப்பரங்குன்றநேசா
யிரக்கமதுகிருபைவைத்து யெளியேனுன்மேல்
செப்புதமக்கண்டுகந்து அய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (29)

என்மனதுவாடுவது கண்டிருந்தும்
யெவர்க்குவந்தவிருந்தெனவே யிருக்கலாமோ
உன்மனதுகல்லோதா னிரங்கொணுதோ
வோதுதமிழ்கேட்கிலேயோ உலகமெல்லாந்
தன்மனதுநீயாமோ நான்தானுன்மேல்
தானினேத்தசித்துதந்து ரட்சியையா
தென்பொதிகைமுனிபணியும் மையாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (30)

நீவாவாகாத்தருள் வெளியேனுள்ளம்
நினேத்தவரமருள்புரிவாய் நீதானப்பா
தாய்வாவா சுவாமிநீவாவாவென்று
தமியேன்கைக்குதவிதந்து ரட்சியையா
வாவாவென்றழைத்தால் வந்தான்மின்னே
வாராதங்கிருப்பதற்று வழக்கேதுண்டோ
தேவாதிதேவா அய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (31)

பரமனருள்நாயகனே வாவாவாலைப்
பார்வதியாள்பாலகனே வாவாயெங்குஞ்
சர்வவுயிர்நாயகனே வாவாசித்துத்
தமிழ்சொரியும்நாயகனே வாவாசித்துக்
கருணைபுரிநாயகனே வாவாயென்னைக்
காத்தருளும்நாயகனே வாவாயெந்தன்
திருவருள்செய்நாயகனே அய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (32)

ஏனய்யாயென்மீதில் மோடிவேண்டாம்
யேழையல்லோபாலனல்லோ யெளியேன்யானும்
நானய்யாவுந்தனிரு பாதம்போற்றி
நாதனேவாவென்றழைத்தால் நாயேன்முன்னே
தானய்யாமுன்தோன்றி யருள்புரிந்து
தற்காத்துரட்சிவள்ளி தாயாள்தந்தை
தேனய்யாஉண்டகனி அய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (33)

நானென்றவல்லபத்தை தீர்க்கவேணும்
நாடியான் சுழிமுனையை நோக்கவேணும்
தானென்றகனபொருளை யாக்கவேணும்
சாகாமல்சற்றுமனங் கிடைக்கவேணும்

வாவென்றவொளியொளித்தான் தோணவேணும்
வடிவேலுமயிலுநான் காணவேணும்
தேனுண்டவாயானே அய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (34)

பரந்துநின்றஎன்மனதைத் திருத்தவேணும்
பலர்முகம்பார்த்துருகாம லிருக்கவேணும்
உறங்தெழுந்தஆகாரம் மொடுங்கவேணும்
உண்மைதனில்மௌனமெலா மடங்கவேணும்
நிரந்தசடாசரமுமனம் நாடவேணும்
நீங்காமற்கருணைபொருந் தாடவேணும்
சிறந்திடம்வயிட்சணமே அய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி (35)

ஆக்கைநரம்பெலும்புதசை உதிரம்சிந்தி
ஐம்புலன்களொடுங்குமுன்னே அய்யாவுன்னை
பார்க்கவேணும்கண்குளிர முகங்களாறும்
பன்னிரண்டுபுயமார்புங் கடம்புஞ்செய்கை
ஏற்கமயில்சேவல்வள்ளி தெய்வயானை
இலகுசத்திவேல்வீர வாகுவீரர்
சீக்கிரமாயெந்தன்முன்னே அய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (36)

ஆடுகின்றபரஞ்சோதி மணியேநான்கும்
அறுமறைக்கும்வல்லவனே அமுதேஆறு
வீடுநின்றுவிளங்குபரஞ் சுடரேஞான
விளக்கொளியேவேதாந்த வேதமூர்த்தி
கூடநின்றுவிளையாட மனதுகூர்ந்து
கோலமயின்மீதேறி வருவாயென்று
தேடுகின்றவெளியேன்முன் னய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (37)

நாவாலும்மனத்தாலும் தியானத்தாலும்
நம்மாலும்தமிழாலும் நாடிநாடி
வாவாவென்றளிக்கவரா திருப்பதுண்டோ
மனதிறங்கிஅடியேன்முன் வாவாசுவாமி
பாவாலேவுனைத்துதித்து உலகத்தோர்கள்
பவுசுபெற்றென்னுளுமுந்தன் பாதங்காண
தேவாயெனுமைபாவென் னய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (38)

நாட்டமுற்றேனுன்மீதி லன்புவைத்து
நானழைத்தால்வருவதற்கு நாயேன்முன்னே
கொட்டையுண்டோவாடியுண்டோவழிதோணுதோ
கூப்பிட்டால்தமிழோரே செவிகேளாதோ

வாட்டமுற்றுநான்மயங்க லாமோநீதான்
மனதிறங்கி அடியேன்முன் மகிழ்ச்சிகூர்ந்து
தேட்டமுற்றேனுன்பதத்தி லன்புவைத்து
சிவசிவாசெந்தில்வ்ளர் சிவனேபோற்றி. (39)

யேகமுற்றபரஞ்சுடரே ஞானமூர்த்தி
யெந்தையேபொதிகைவரை யிருக்கும்நாதா
ஆகமுற்றசெழுங்கனியே யேழைக்கேற்ற
அப்பனேயென்னைமுழுதும் ஆண்டசாமி
தாகமுற்றுவுனைத்தேடி வருந்துகின்ற
தமியேன்முன்வரவேணும் சமயமையா
தேகசித்திதந்தருளும் அய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி (40)

வச்சிரவேலேந்துமீரூர் கரமுந்தோளும்
மணிமுடியுங்குண்டலமும் மயிலும்சேவல்
கச்சிடையும்வச்சிரமும் யிலங்குமார்பும்
காதிலிடும்குண்டலமும் கையும்வேலும்
தற்சொரூபந்தனைக்காட்டி யெளியோன்கண்கள்
தரித்தென்னிசந்ததெல்லாம்தருவாய்வேலா
தெட்சணயனம்பரவு மய்பாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (41)

குருவருளையென்னாளும் நோக்கவேணும்
கோபமென்றமுளையதனைப் போக்கவேணும்
கருவியருள்மாய்கவலை நீக்கவேணும்
காலடியேனடிமனந் தூக்கவேணும்
அரகராசிவசுப்ர மணியாவென்று
அனுதினமும்மலர்ப்பதத்தைக்காணவேணும்
திருவருள்தந்தெனையாளு மையாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (42)

அடங்காமலோடுகின்ற பேய்மனத்துக்
கருள்காட்டிஅரவணைத்து அன்பாய்ஞான
வடம்பூட்டிப்பிடித்திருக்கி யறிவொன்றேங்கு
மாமணிக்கம்பத்தோடே வரிந்துசேர்ந்து
உடங்கொள்ளும்படியாயி ரெளுத்தால்முட்டி
யொடுங்கின்றேனுளந்தனிலே புகந்தென்னாலும்
இடங்காணும்படிக்கருள்செய் அய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (43)

நாசிசெவிகண்மூக்குப் புருவமையா
நடுவிலொருநாசமிடை பின்கலையான
நாசியெனுஞ்சுழிமுனைக்கு நீங்காவட்டம்
வட்டமதில்மேல்வீடு மௌனவாசல்

ஓசைநடைபுரிந்தருளும் பதமுங்காட்டி
யுன்கிருபைசெயல்காட்டி யுகந்தோமென்று
தேசிகனேயெனையாளு மையாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (44)

உன்கிருபைசொல்லெனக்குத் துரவும்வேணும்
ஊர்வழிதுணையெனக்கு வரவும்வேணும்
யெங்கிலும்முன்செந்தமிழைப் பாடவேணும்
யெதிர்த்தோரைவாயடக்கிப் போடவேணும்
அங்கிலும்நீநின் றுவிளை யாடவேணும்
அனுதினமும்மலர்பதத்தைச் சூடவேணும்
செங்கையிலேவேலிலங்க அய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (45)

மடம்பொருளேவிதுவென்ன மாயவாழ்வு
தான்பொருளென்றெண்ணிலேன் தமியேனுந்தன்
நடம்பொருளேதான்பாரா திருந்ததாகில்
நானுமெங்கேசெல்வதினி நாயனேசொல்
இடம்பொருளேவல்தந்து நான்தானென்னு
யென்னுலும்நினைத்தசித்தி யின்பங்காட்டி
திடம்பொருளேதந்துதவும் அய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (46)

ஓசைகொண்டசதங்கைதண்டை சிலம்புகொஞ்ச
யுகந்துநடம்புரிந்தபத முன்னேகாட்டி
ஆசைகொண்டுவருந்தியுனை நினைத்தேன்காண்
அய்யனேவாவென்று கெஞ்சியழைப்பதல்லால்
ஏசிலம்புகொண்டுமெள்ள யிங்குவாவென்
றேச்சுனைப்பிடித்துகடிக்க வெண்ணிலான்காண்
தேசமெங்குநிறைந்தருளு மய்யாவாவா
சிவசிவாசெந்தில்வலர் சிவனேபோற்றி. (47)

நாவிலுமென்செந்தமிழைப் பாடவேணும்
நாடோறுமுன்பாதங் கொண்டாடவேணும்
ஏவல்செய்துதேவதைகள் நிற்கவேணும்
யென்னாளும்வீரர்சுத்தி கார்ககவேணும்
வசிலமாய்வள்ளியம்ம னிடங்தெய்வானை
மலர்பாதம்நீங்காமல் நிற்கவேணும்
சேவல்கொண்டயிலிங்க அய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (48)

தங்கமுடிசூடுகின்ற பரனேபோற்றி
சகலகலைவல்லவனே ஸ்வாமிபோற்றி
திங்கள்முடிநஞ்சடையார் பாலாபோற்றி
செகசூட்சிவுமையவள்கண் மணியேபோற்றி

செங்கைவடிவேலவனே கடம்பாபோற்றி
செகமெல்லாமுண்டருள்மால் மருகாபோற்றி
மங்கைவள்ளி தெய்வானை மருளாபோற்றி
மயூரகிரிதனிலுரைவப் போற்றிபோற்றி. (49)

அத்தனருள்பரமகுரு சுவாமிவாவா
அங்கயற்கண்புத்திரனே அய்யாவாவா
முத்திதரும்குமரகுரு மூர்த்திவாவா
முத்தையாநால்வேதம் முதலோவாவா
பத்தர்மனத்தியானவள்ளி பங்காவாவா
பச்சைமயில்வாகனனே பரனேவாவா
சத்திமுனிவோர்பணியும் குகனேவாவா
சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி. (50)

ஆதியாயுலகெங்கும் நிறைந்தசோதி
அன்பத்தோரட்சயத்தி னிறைந்தசோதி
ஓதுகின்றசெந்தமிழின் குருவேசோதி
ஓங்காரமானயெழுத் தாகந்தசோதி
நீதியாய்சடாட்சரத்துள் ளாடும்சோதி
நிஷ்களானந்தபர மானசோதி
சாதிபலபேதமெல்லாம் சமயசோதி
சமயமிதுவந்தென்னை காத்தருவாய்சோதி. (51)

ஆராரு ஆய்மூன்று கவினன்சொல்லி
ஆராதனைசெய்ய அடியேன்முன்னே
மாராதவேலுபனி ரெண்டுகையும்
வள்ளிதெய்வானையோடு மயின்மீதேறி
காராருபதஞ்சிலம்பு கலீரென்றாட
களிகூர்ந்துவுந்தனிரு பாதம்போற்றி
தீராதநோய்தீர்க்கும் அய்யாவாவா
சிவசிவாசெந்தில்வளா சிவனேபோற்றி. (52)

சிவசெந்திமாலை
முற்றிற்று.